DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 46/2017 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 1 |
| Name | முருகன் |
| Father / Husband Name | மலைச்சாமி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 05th June 2023.

---

**(1வது எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. 2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை முத்துநகரில் குடியிருந்து வருகின்றேன். நான் சரவணா என்ற பெயரில் மளிக்கைக்கடை வைத்து நடத்தி வருகின்றேன். ஆஜர் 1வது எதிரியைத் தெரியும். 2 முதல் 4 எதிரிகளைத் தெரியும். 1வது

எதிரியின் வீடு என் வீட்டின் பக்கத்தில் உள்ளது. தேதி ஞாபகமில்லை நவம்பர் மாதம் 2015 ம் வருடம் எனது வீட்டில் செண்டிரிங் போட்டிருந்தோம் ஆஜர் 1வது எதிரியின் சுமார் 30 ஆடுகள் என் வீட்டிற்குள் புகுந்து செண்டிரிங்கிற்காக போடப்பட்டிருந்த கம்புகளை சேதப்படுத்தி அங்கு வைத்திருந்த உணவு பொருட்களை நாசப்படுத்திவிட்டது.

2) என் மனைவி மேற்படி ஆடுகள் வீட்டில் நுழைந்து சேதப்படுத்தியதை 1வது எதிரியின் மனைவியான 2 வது எதிரி லிங்கம்மாளிடம் சொன்னதற்கு தேவுடியா முண்ட அப்படித்தான் ஆடுகள் வரும் என்று இன்னும் கெட்ட கெட்ட வார்த்தைகளால் என் மனைவியை 2 வது எதிரி திட்டியுள்ளார்.

3) ஆட்டை பிடித்து கட்டச் சொன்னதற்கு அருவருக்க தக்க வார்த்தைகளால் 2 வது எதிரி என் மனைவியை திட்டிய விவரத்தை என் மனைவி நான் கடையில் இருக்கும் போது வந்து சொன்னார். நான் மதிய உணவிற்காக வீட்டிற்கு வந்த போது மேற்படி செய்கைகள் குறித்து 2 வது எதிரியிடம் கேட்ட போது உன் மனைவியை நீ அடக்கி கொள்ளுடா என்றும் வாடா போடா என்றும் அசிங்கமாக பேசினார்.

4) நான் உங்களிடம் பேச விரும்பவில்லை உங்கள் கணவரிடம் பேசிக்கொள்கிறேன் என்று நான் 2 வது எதிரியிடம் சொல்லிவிட்டு என் கடைக்கு சென்றுவிட்டேன். அதன் பிறகு இரவு சுமார் 07.15 மணியளவில் நானும், என் மகளும் கடையில் இருந்த போது ஆஜர் 1வது எதிரி ஜெயபால் மற்றும் 2 வது எதிரி லிங்கம்மாள் என் கடைக்கு வந்து 1வது எதிரி என்னிடம் உன் கடை மற்றும் வீட்டை தீ வைத்து கொளுத்திவிடுவேன் என்றும், இன்னும் தரக்குறைவாக அடவாடியான வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்த போது என் மகள் என் மனைவிக்கு தகவல் சொல்லி என் மனைவியும் கடைக்கு வந்துவிட்டார்.

5) 2 வது எதிரி என் மனைவியை பார்த்த போது இந்தா வந்துவிட்டாள் தேவுடியா என்று கெட்ட வார்த்தையால் பேசி இவளை முதலில் அடியுங்கள் என 2 வது எதிரி 1வது எதிரியிடம் சொன்னவுடன் 1வது எதிரி போதையில் என் மனைவியின் தலைமுடியை பிடித்து இழுத்து அடித்து கீழே

தள்ளிவிட்டார். நான் விலக்க போகும் போது ஆஜர் 1வது எதிரி என்னை கம்பை எடுத்து அடித்தார்.

6) சாத்தையா என்பவர் சத்தம் போட்டு விலக்க வந்த போது அவரையும் தாக்கிவிட்டனர். அருகில் இருந்த கோவிந்தன், செந்தில், தனிமலை மற்றும் 1, 2 எதிரிகள் மற்றும் இன்னும் பெயர் தெரியாத நபர்கள் சிலர் ஆக மொத்தம் 9 பேர்கள் சேர்ந்து என்னை வயிற்றிலும், நெஞ்சிலும் ஏறி மிதித்து உடம்பில் அடித்து கடையை சூறாடிவிட்டனர். உன்னை உயிரோடு விடமாட்டேன் என்று ஆஜர் 1வது எதிரி என்னை கொலைமிரட்டல் விடுத்து வந்தவர்கள் 9 பேரும் சென்றுவிட்டார்கள்.

7) மேற்படி சம்பவத்தில் சாத்தையாவுக்கு வாயில் அடிபட்டு பல்லில் இரத்தம் வந்தது உதட்டில் அடிபட்டிருந்தது. என் மனைவியை 1, 2 எதிரிகள் தலைமுடியை பிடித்து தாக்கியதில் தலையிலும், முதுகிலும் காயம் ஏற்பட்டது. எனக்கும், சாத்தையாவுக்கும் ஏற்பட்ட காயத்திற்காக சாத்தையா என்னையும் அழைத்துக் கொண்டு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு இரவு சுமார் 07.50 - 08.00 மணியளவில் சென்றோம். என் மனைவி வேறு ஒரு வாகனத்தில் எங்களுக்கு பின்னால் மருத்துவமனைக்கு கூட்டி வந்தனர்.

8) நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சிவகங்கை நகர் காவல் நிலைய போலிசார் அங்கு வந்து நடந்த விவரங்களை என்னிடம் கேட்டு போலிசார் நான் சொன்னதை எழுதி அந்த புகார் வாக்குமூலத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் மருத்துவமனையில் வைத்து கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தனர்.

9) என் மனைவியை 1 மற்றும் 2 எதிரிகள் மற்றும் அவர்களின் இரண்டு மகள்கள் சேர்ந்து திட்டிக்கொண்டே இருந்ததாலும், என் மனைவி 1, 2 எதிரிகளின் செய்கை தாங்க முடியாமல் இரண்டு முறை கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையையும் எடுக்காததாலும் எதிரிகளின் செய்கைகள் தொடர்ந்ததாலும் என் மனைவி விஷம் அருந்தி 11.08.2016 ம் தேதி

இறப்பிற்கு 1, 2 எதிரியின் குடும்பத்தார் தான் காரணம் என எழுதிவைத்துவிட்டு இறந்துவிட்டார். இது நாள் வரை இவ்வழக்கு சம்பவத்தில் எதிரிகளால் எனக்கு ஏற்பட்ட காயத்தினால் எனக்கு வலி இருந்து வருகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1 வது எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 05.06.2023**

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**